*யா/ மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்*

# பரிசில்நாள் – 2014

**காலம்: 02-12-2014 செவ்வாய்க்கிழமை**
**நேரம்: பிற்பகல் 1-30 மணி**
**இடம்: பாடசாலை வெளி அரங்கு**

**தலைமை:**
**திருமதி ஜெ. தேவேஸ்வரன் அவர்கள்**
(வித்தியாலய முதல்வர்)

**பிரதம விருந்தினர்:**
**கௌரவ கேசவன் சயந்தன் அவர்கள்**
(மாகாண சபை உறுப்பினர்)

**சிறப்பு விருந்தினர்:**
**உயர்திரு. கு. சிவானந்தம் அவர்கள்**
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம்)

**கௌரவ விருந்தினர்கள்:**
***திரு. கு. தனுசன் அவர்கள்***
(பிரதேச சபை உறுப்பினர்)

***திருமதி வ. வைகுந்தநாதன் அவர்கள்***
(ஓய்வுநிலை அதிபர்)

நிகழ்வு சிறக்க தங்கள் நல்வரவை கண்டு உவகையடைகின்றோம்.

பாடசாலைச்சமூகம்

# பாடசாலைக் கீதம்

வாழ்க எங்கள் கல்விக்கூடம் சாந்தநாயகி
மட்டுவிலில் பெருமை சேர்க்கும் சாந்தநாயகி
எழுத்தறிவித்தவன் இறைவன் என்னும் கூற்றொடு
நித்தியமாய் பல்லாண்டு வாழ்க! வாழ்கவே!

ஆயிரத்து தொளாயிரத்து முப்பத் தாறிலே
ஆசிரியர் மகாலிங்கம் உருவாக்கினார்
மட்டுவிலில் கல்வி ஓங்க சாந்தநாயகி - அன்னை
மொட்டவிழ்ந்து மலர்ந்தாள் அவள்பாதம் போற்றுவோம்

தமிழோடு சுற்றாடல் கணிதம் சமயம் ஆங்கிலம்
அழகியலும் பண்பாடும் விளையாட்டதுவாய்ப் பயிற்சி
பெருமை வாய்ந்த வல்லுநராய் எம்மை ஆக்கிடும் எங்கள்
அன்னை சாந்தநாயகியின் பாதம் போற்றுவோம்.

அன்போடு எம்மை பயிற்றும் ஆசான்கள் வாழ்கவே
எம்மை நெறியாளும் அதிபர் என்றென்றும் வாழ்கவே
கல்விகற்கும் மாணவர்கள் அனைவரும் வாழ்கவே
கல்விகற்கும் மாணவர்கள் அனைவரும் வாழியவே!

அன்னை சாந்தநாயகி பல்லாண்டு வாழ்கவே!
அன்னை சாந்தநாயகி பல்லாண்டு வாழ்கவே!

# நிகழ்ச்சி நிரல்

❄ விருந்தினரை அழைத்துவரல்

❄ கொடியேற்றல்

❄ மங்கள விளக்கேற்றல்

❄ இறைவணக்கம்

❄ வரவேற்புரை

❄ பரிசில்நாள் அறிக்கை

❄ பரிசில் வழங்கல்

❄ சிறப்பு விருந்தினர் உரை

❄ கௌரவ விருந்தினர் உரை

❄ பிரதம விருந்தினர் உரை

❄ கலை நிகழ்வுகள்

❄ நன்றியுரை

# வித்தியாலய முதல்வர்



திருமதி ஜெயமணி தேவேஸ்வரன்
S.L.P.S. 2:II

# யா/மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய பரிசில்நாள் அறிக்கை - 2014

எமது வித்தியாலய பரிசில் நாள் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கின்ற வடமாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியும் ஆகிய உயர்திரு. கேசவன் சயந்தன் அவர்களே! சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கின்ற பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு. குமாரசாமி சிவானந்தம் அவர்களே! கௌரவ விருந்தினர்களாக வருகை தந்திருக்கும் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திரு. குகதாசன் தனுசன் அவர்களே! இவ்வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி வசந்தாதேவி வைகுந்தநாதன் அவர்களே! மற்றும் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே! உதவிக் கல்விப் பணிப்பாளர்களே! உதவிக் கல்விப் பணிப்பாளர் களே! முதன்மை ஆசிரியர்களே! கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்களே! அயற்பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! பழைய மாணவர்களே! அன்பான மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவருக்கும் இப் பரிசில் நாளில் எனது அன்பான வணக்கங்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய நிகழ்வின் முதன்மை விருந்தினர் அவர்களே! மீசாலை மண்ணில் பிறந்த தாங்கள் அயற்பாடசாலை ஆகிய யா/வீரசிங்கம் மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்று, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உயர்நிலைக் கல்வியைப் பெற்று விஞ்ஞான பயிற்றப்பட்ட ஆசிரியராக சேவையாற்றிய காலத்தில் சட்டத்துறையைக் கற்க வேண்டும் என்ற பேரவா கொண்டு கொழும்பு சட்டக் கல்லூரியில் சட்டத்துறையைக் கற்று ஓர் சிறந்த

சட்டத்தரணியாக சேவையாற்றி வருகிறீர்கள். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற வாக்கிற்கு அமைவாக மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற பெருநோக்கோடு நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு பெரு வெற்றியும் பெற்றீர்கள். தங்களது துடிப்பான பேச்சும் துணிவான செயலும் தங்களது ஆளுமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. தாங்கள் எவ்வளவோ வேலைப் பளுக்களின் மத்தியிலும் எமது விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்துகொள்வதையிட்டு பாடசாலைச் சமூகம் பெருமைகொள்கின்றது.

சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களே! தாங்கள் அதிபராக தங்களின் அயற் பாடசாலையாகிய யா/வீரசிங்கம் மத்திய கல்லூரியில் ஆற்றிய சேவைகள் தென்மராட்சி மண் அறிந்ததே. அத்துடன் நின்றுவிடாது கோட்டக்கல்விப் பணிப்பாளராக அன்றிலிருந்து இன்றுவரை தாங்கள் ஆற்றிய சேவைகள் எண்ணில் அடங்காதவை. தங்களின் எளிமையான தோற்றமும் புன்சிரிப்பும் மற்றவர்களை மதிக்கின்ற பண்பும் தங்களை உயர் நிலைக்குக் கொண்டுசென்றன. தாங்கள் கல்வி நிர்வாக சேவை வகுப்பு III இற்கு உயர்வு பெற்றமையையிட்டு நாம் பெருமகிழ்வடைகின்றோம். தங்களுடைய சேவைக்காலம் முடிவுறும் இக் காலகட்டத்தில் ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய மட்டுவில் கல்வத்துச் சிவனை வேண்டுகின்றேன்.

கௌரவ விருந்தினர் திரு. குகதாசன் தனுசன் அவர்களே! ஆரம்பக் கல்வியை யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையிலும் உயர்நிலைக் கல்வியை யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் கற்ற தாங்கள் கல்வியியற் கல்லூரி பயிற்சி நெறி கிடைத்திருந்தும்

அதற்கு செல்லாது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற பெருநோக்கோடு பிரதேச சபை உறுப்பினராக செயற்பட்டு வருவதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

எமது வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் திருமதி வ. வைகுந்தநாதன் அவர்களே! தாங்கள் தங்களுடைய சேவைக் காலத்தில் இவ் வித்தியாலயத்திற்கு ஆற்றிய சேவைகள் சொல்லில் அடங்காதவை. இப் பாடசாலையில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்விற்கும் தங்களை விருந்தினராக அழைப்பதையிட்டு பாட சாலைச் சமூகம் பெருமை கொள்கின்றது. இப் பாடசாலை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கும் தாங்கள் இன்றைய பரிசில் நாள் நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்துள்ளமையையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

## எமது வித்தியாலய ஆளணி விபரம்

1. திருமதி தேவேஸ்வரன் (அதிபர்) பயிற்றப்பட்ட ஆ.கல்வி
2. திருமதி ப. இராசரத்தினம் (ஆசிரியர்) பயி.ஆ.கல்வி
3. திருமதி க. சத்தியசீலன் (ஆசிரியர்) பயிற்றப்பட்ட கல்விமாணி
4. திரு. ச. உமாமகேஸ்வரன் (ஆசிரியர்) பயிற்றப்பட்ட இந்துசமயம்
5. திருமதி சு. உதயகுமார் (ஆசிரியர்) கலைப்பட்டதாரி
6. செல்வி வை. ஞானகௌரி (ஆசிரியர்) பயிற்றப்பட்ட ஆசிரியர்
7. செல்வி ஜெ. திவ்யா (ஆசிரியர்) பகுதிநேர ஆசிரியர் (ஆங்)

## வித்தியாலய மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 04 | 04 | 08 |
| 2 | 07 | 01 | 08 |
| 3 | 04 | 05 | 09 |
| 4 | 04 | 13 | 17 |
| 5 | 02 | 03 | 05 |
| மொத்தம் | 21 | 26 | 47 |

## மாணவர் பரம்பல்

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 2011 | 31 | 42 | 73 |
| 2012 | 26 | 36 | 62 |
| 2013 | 23 | 25 | 48 |
| 2014 | 21 | 26 | 47 |

## புலமைப் பரிசில்

| ஆண்டு | தோற்றியோர் | 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | சித்திய டைந்தோர் |
|---|---|---|---|
| 2011 | 14 | 04 | – |
| 2012 | 13 | 03 | 02 |
| 2013 | 09 | 03 | – |
| 2014 | 05 | 03 | – |

## 2014-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை புள்ளி விபரம்

| இல. | மாணவர் பெயர் | பெற்ற புள்ளி |
|---|---|---|
| 1. | ர. விசாளன் | 109 |
| 2 | த. விதுசன் | 99 |
| 3 | ரா. பிருத்திகா | 107 |
| 4 | ஈ. நிசாந்தினி | 118 |
| 5 | ச. வானுஜா | 57 |

## பாடசாலை முகாமைத்துவக்குழு

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு திட்டமிடலே முக்கியமானது. அந்தவகையில் எமது பாடசாலை வளர்ச்சிக்கு சிறந்த திட்டமிடல் களையும் ஆலோசனைகளையும் வழங்கிவரும் எமது முகாமைத் துவக் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



## பாடசாலை அபிவிருத்திக் குழு

எமது வித்தியாலயத்தில் பாடசாலை அபிவிருத்திக்குழு அமைக்கப்பட்டு மிகச் சிறப்பாக இயங்கிவருகின்றது. மாதம் ஒரு முறை இக்குழு கூடி பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக செயற்றிட்டங்களை கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொண்டுவருகின்றது.

## பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள்

தலைவர்: திருமதி ஜெ. தேவேஸ்வரன்
(வித்தியாலய முதல்வர்)

செயலாளர்: திருமதி ரவிகாந் ஜென்சி
(பெற்றார்)

பொருளாளர்: திரு. ச. உமாமகேஸ்வரன்
(ஆசிரியர்)

உறுப்பினர்கள்: திருமதி க. சத்தியசீலன் (ஆசிரியர்)
திருமதி ப. இராசரத்தினம் (ஆசிரியர்)
திருமதி மோ. சந்திரவதனி (பெற்றார்)
திருமதி ரு. தயாராணி (பெற்றார்)
திருமதி சி. சிவராணி (பழைய மாணவர்)
திருமதி சி. விமலாதேவி (பழைய மாணவர்)

வலயப் பிரதிநிதி: திருமதி சிவத்திரை சிவநாதன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)



## நாளாந்த செயற்பாடுகள்

எமது பாடசாலையில் நாளாந்தம் காலை ஆராதனைகளும் ஆசிரியர் மாணவர்களது நற்சிந்தனைகளும் இடம்பெற்று வருகின்றன. ஒவ்வொரு நாளும் பத்திரிகை வாசித்தல், பொதறிவு வினாக்களைக் கேட்டல், மும்மொழிச் செயற்பாடுகள், வாய்பாடு, விரைவு கணிதச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் செயற்பட்டு மகிழ்வோம் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தினமும் பாடசாலைக் கீதத்துடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நிறைவுபெறுகின்றன.

## பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD)

பாடசாலைகளில் ஆசிரியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளை வலுவூட்டுகின்ற வகையில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் அவர்களின் கருத்துக்கள் ஊடாகவும், வகுப்பறை மதிப்பீடுகள் ஊடாகவும் ஆசிரியர் கூட்டங்கள் ஊடாகவும் பெறப்பட்டு தேவைப்பாடுகளை முன்னுரிமைப்படுத்தி நடைபெற்றுவருகின்றன.

## மாணவர் கல்வி உயர்மட்டச் செயற்பாடு

பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான பல விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகின்றோம். அந்தவகையில் பாடரீதியான செயற்பாட்டுப் பட்டறைகள், வாசிப்பு முகாம்கள், களப் பயணங்கள், தரம் 5 மாணவர்களுக்கான காலை, மாலை நேர வகுப்புக்கள், வலய மட்ட, மாகாண மட்ட பயிற்சிப் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. அத்துடன் கற்றலில் இடர்படும் மாணவர்களுக்கான (தரம் 3, 4, 5) (மொத்தம் 6 மாணவர்) எழுத்தறிவூட்டல் வகுப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.




## இணைபாடவிதானம்

மாணவர்களின் உடல், உள ஆரோக்கியத்தையும் ஆளுமை யையும் தலைமைத்துவத்தினையும் வளர்ப்பதில் முன்னிற்பது இணைபாடவிதானம் அந்த வகையில் எமது வித்தியாலயத்தில் வருடந்தோறும் இல்ல மெய்வன்மைப்போட்டி சிறப்பாக நடைபெற்று

வருகின்றது. வலயமட்ட போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்கின்றனர்.

## மன்றங்கள்

பாடசாலைகளில் அறிவு, திறன், மனப்பாங்கை விருத்தி செய்யும் வகையில் மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. அந்தவகையில் எமது வித்தியாலயத்தில் சமய மன்றம், தமிழ் மன்றம், ஆங்கில மன்றம், சுகாதார மன்றம் போன்ற மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் மன்றங்கள் செயற்படுத்தப்படுகின்றன.



## போட்டிகள்

தென்மராட்சி கல்வி வலயத்தால் நடத்தப்படும் ஆரம்ப பிரிவு போட்டிகளில் எமது வித்தியாலய மாணவர் பங்குபற்றி வெற்றியீட்டி வருகின்றனர். சரசாலை நூலகத்தினால் நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் தரம் 3 மாணவி செல்வி கோமகள் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார். சென்ற மாதம் செலான் வங்கியினால்

நடத்தப்பட்ட ஆரம்ப பிரிவு பாடசாலைகளுக்கிடையிலான பாண்ட் வாத்தியம் இசைக்கும் போட்டியில் எமது வித்தியாலய மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர். அக்குழுவில் செயற்பட்ட மாணவர்களுக்கும் அதனைப் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்

## பாடசாலைக்கான உதவிகள்

2013-ம் ஆண்டு எமது பாடசாலைக்கென கௌரவ நாடாளு மன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களினால் நிதி ரூபா 75,000 ஒதுக்கப்பட்டது.

எமது வித்தியாலய பழைய மாணவர் திரு. சி. சுபாஸ்கரன் அவர்களினால் ரூபா 1,15,000 பாடசாலைக் கணக்கில் இடப்பட்டது. இவ் இரண்டு நிதிகளையும் கொண்டு நாம் பாடசாலைக்கு மிகத் தேவையாகக் கருதப்பட்ட நிழற்பிரதி இயந்திரம் ஒன்றினைக் கொள்வனவு செய்ததுடன் எமது வித்தியாலய முன்பக்க மதிலுக்கான சீமெந்துப் பூச்சுக்களையும் மேற்கொண்டிருந்தோம்.

எமது வித்தியாலய பழைய மாணவர் திரு. பொ. நாகேந்திரம் அவர்களிடம் இருந்து பெற்ற ரூபா 30,000 ஐக் கொண்டு வித்தியாலய முன்பக்க மதிலுக்கான வர்ணப் பூச்சுக்களை மேற்கொண்டோம். அத்துடன் எமது பாடசாலை நுழைவாயிலுக்கான பெயர் வளைவுக் கான தகரம் அடித்தல், வர்ணம் பூசுதலை மேற்கொள்வதற்காக அதனை அன்பளிப்புச் செய்த முன்னாள் ஆசிரியர் திருமதி லலிதா ஜெயக்குமார் அவர்களின் உதவியுடன் அவற்றினையும் செய்து முடித்தோம்.

இவ்வேளையில் இவ் வேலைகளுக்கு ஒத்தாசை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், எமது வித்தியாலய முக்கிய தேவையாக இருந்த அதிபர் அலுவலக உட்பக்க சீற் அடித்தல் (Level sheet) வேலையைச் செய்வதற்காக எமது இன்றைய பிரதம விருந்தினரும் மாகாண சபை உறுப்பினருமாகிய கௌரவ கேசவன் சயந்தன் அவர்களினால் ஒதுக்கப்பட்ட நிதி ரூபா 75,000 மூலமாக அவ்வேலையும் எங்களால் நிறைவுசெய்யப்பட்டுள்ளது. இவ்வேளையில் முதன்மை விருந்தினர் அவர்களுக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பாடசாலைத் தேவைகள்

1. கணனி மூலை
2. துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம்
3. பிரதான மண்டபம்
4. களஞ்சிய அறை
5. ஆசிரியர் ஓய்வறை

## நன்றிகள்

இன்றைய பரிசில் நாள் நிகழ்விற்கு எமது அன்பான அழைப்பை ஏற்று முதன்மை விருந்தினராக வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியும் ஆகிய உயர்திரு கேசவன் சயந்தன் அவர்களுக்கு எமது பாடசாலைச் சமூகம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறப்பு விருந்தினராக வருகைதந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது கோட்டக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு.

கு. சிவானந்தம் அவர்களுக்கும் எமது பாடசாலை சமூகம் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கௌரவ விருந்தினர்களாக வருகைதந்த பிரதேச சபை உறுப்பினர் கு. தனுசன் அவர்களுக்கும் ஓய்வுநிலை அதிபர் திருமதி வ. வைகுந்தநாதன் அவர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகைதந்திருக்கும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு அங்கத்தவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

அதிபர்

**திருமதி ஜெ. தேவேஸ்வரன்**

# பரிசில் நாள் 2014

## பரிசில் பெறும் மாணவர் விபரம்

தரம் 1

| இல மாணவர் பெயர் | ஆண்டு | தரம் | விபரம் |
|---|---|---|---|
| 1. தி. தனுசியன் | 2014 | 1 | |
| 2. சி. அபிசயன் | 2014 | 1 | |
| 3. ஜெ. திவிசன் | 2014 | 1 | |
| 4. ச. சாருகன் | 2014 | 1 | |
| 5. ந. சுதர்ஷா | 2014 | 1 | |
| 6. கு. சியானி | 2014 | 1 | |
| 7. த. தருன்சிகா | 2014 | 1 | |
| 8. ஜெ. வைஸ்ணவி | 2014 | 1 | |
| 1 சி. நிசாந்தன் | 2011 | 5 | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 2. ம. மதுசா | 2011 | 5 | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் |
| 3. தே. ரேலங்கி | 2011 | 5 | தமிழ், சுற்றாடல், சமயம் |
| 4. சி. விஜிதாஞ்சலி | 2011. | 5 | கணிதம் |
| 5. கு. குயின்சிகா | 2011 | 5 | ஆங்கிலம் |
| 6. பா. சந்துஜன் | 2011 | 4 | தமிழ், கணிதம், ஆங்கிலம், சமயம் |
| | 2012 | 5 | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம் |

| | | | |
|---|---|---|---|
| 7. சி. திலக்ஷன் | 2011 | 4 | தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், சமயம் |
| | 2012 | 5 | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 8. சி. சதுஷனா | 2011 | 4 | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| | 2012 | 5 | தமிழ், கணிதம், ஆங்கிலம் |
| 9. ம. மதுரா | 2011 | 4 | சுற்றாடல், ஆங்கிலம் |
| | 2012 | 5 | சுற்றாடல், ஆங்கிலம், சமயம் |
| 10. ந. டெல்சன் | 2011 | 3 | கணிதம், சமயம் |
| | 2012 | 4 | தமிழ், சுற்றாடல், ஆங்கிலம், சமயம் |
| | 2013 | 5 | தமிழ், சுற்றாடல், ஆங்கிலம், கணிதம், சமயம், பாடநூல் பேணல் |
| 11. தி. குகப்பிரியா | 2011 | 3 | சுற்றாடல், ஆங்கிலம் |
| | 2012 | 4 | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் |
| | 2013 | 5 | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம், வரவு ஒழுங்கு, பாடநூல் பேணல் |
| 12. உ. சிவப்பிரியன் | 2011 | 3 | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம் |
| | 2012 | 4 | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம் |
| 13. த. வானுஜன் | 2012 | 4 | சமயம் |
| | 2013 | 5 | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், பாடநூல் பேணல் |

| | | | |
|---|---|---|---|
| [illegible] [illegible]. மிதுசா | [illegible] | 3 | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம் |
| 15. பா. மதுசனா | 2011 | 3 | தமிழ் |
| | 2012 | 4 | கணிதம் |
| 16 ரு. தனுஷியா | 2013 | 5 | ஆங்கிலம் |
| 17 த. விதுசன் | 2011 | 2 | கணிதம், சுற்றாடல் |
| | 2012 | 3 | கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் |
| | 2013 | 4 | கணிதம், சுற்றாடல், தமிழ், பாடநூல் பேணல் |
| 18. ரா. பிருத்திகா | 2011 | 2 | தமிழ் |
| | 2012 | 3 | தமிழ், சுற்றாடல், சமயம் |
| | 2013 | 4 | தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம், ஆங்கிலம், பாட நூல் பேணல் |
| 19. பி. ஜெனுஷியா | 2011 | 2 | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் |
| | 2012 | 3 | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் |
| 20. இ. பிரதீனா | 2011 | 2 | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் |
| | 2012 | 3 | தமிழ், சமயம், ஆங்கிலம் |
| 21. ச. ரிசாந்தினி | 2012 | 3 | கணிதம் |
| | 2013 | 4 | கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம், பாடநூல் பேணல் |
| 22. ர. கிஷாலன் | 2013 | 4 | தமிழ், சமயம், வரவு ஒழுங்கு |

| | | | |
|---|---|---|---|
| 23. ச. இசைப்பிரியா | 2011 | 2 | சுற்றாடல், சமயம் |
| 24. நீ. அபிசனா | 2011 | 1 | தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல் |
| | 2012 | 2 | தமிழ், சுற்றாடல், சமயம் |
| | 2013 | 3 | தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம், ஆங்கிலம், பாடநூல் பேணல் |
| 25. ஜெ. லக்சியா | 2011 | 1 | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| | 2012 | 2 | தமிழ், கணிதம், சமயம் |
| | 2013 | 3 | தமிழ், சுற்றாடல், சமயம், வரவு ஒழுங்கு, பாடநூல் பேணல் |
| 26. பே. மேனுஜா | 2011 | 1 | கணிதம், தமிழ், சுற்றாடல், சமயம் |
| | 2012 | 2 | கணிதம் |
| | 2013 | 3 | கணிதம், தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பாடநூல் பேணல் |
| 27. ற. மெல்கியா | 2012 | 2 | கணிதம் |
| | 2013 | 3 | ஆங்கிலம் |
| 28. சி. கஜேந்திரா | 2012 | 2 | கணிதம், சுற்றாடல், சமயம் |
| 29. தி. விந்துஜன் | 2012 | 2 | தமிழ், சமயம், சுற்றாடல் |
| 30. கி. பிரசாஜினி | 2013 | 3 | கணிதம் |
| 31. ம. கபிதா | 2012 | 2 | சமயம், கணிதம் |
| 32. தே. கிஷானி | 2012 | 2 | சுற்றாடல் |

| | | | |
|---|---|---|---|
| 33. கா. கோமகள் | 2012 | 1 | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் |
| | 2013 | 2 | தமிழ், சமயம், சுற்றாடல், கணிதம், பாடநூல் பேணல், வரவு ஒழுங்கு |
| 34. சி. றக்ஷனா | 2012 | 1 | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல் |
| | 2013 | 2 | தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல், பாடநூல் பேணல் |
| 35. ஞா. பவித்திரா | 2012 | 1 | சமயம் |
| | 2013 | 2 | தமிழ், சமயம், பாடநூல் பேணல் |
| 36. சி. டிஷானா | 2013 | 2 | தமிழ் |
| 37. கி. கிஷான் | 2012 | 1 | தமிழ், சுற்றாடல் |
| | 2013 | 2 | சுற்றாடல் |
| 38. பா. தருன் | 2012 | 1 | கணிதம் |
| | 2013 | 2 | கணிதம் |
| 39. தி. திகழ்மறவன் | 2013 | 1 | சமயம், தமிழ், கணிதம், பாடநூல் பேணல் |
| 40. ர. அகிலன் | 2013 | 1 | தமிழ், கணிதம், சுற்றாடல், பாடநூல் பேணல் |
| 41. தி. நிருசன் | 2013 | 1 | தமிழ், கணிதம், சுற்றாடல், பாடநூல் பேணல் |
| 42. தி. சந்தோஸ் | 2013 | 1 | கணிதம், சமயம், வரவு ஒழுங்கு |
| 43. த. இந்துசன் | 2013 | 1 | சமயம் |
| 44. ரு. விதுசா | 2013 | 1 | சுற்றாடல் |

# திரு. சி. மகேந்திரராசா அவர்களால் வழங்கப்படும் அன்பளிப்பு

| | | |
|---|---|---|
| 45. | சி. யதுசன் | 2 |
| 46. | ஜெ. வேணுகன் | 2 |
| 47. | சு. இசைப்பிரியன் | 3 |
| 48. | த. யதுர்சன் | 3 |
| 49. | அ. சஞ்சிகா | 3 |
| 50. | ச. ராகுலன் | 4 |
| 51. | ஞா. கனிஸ்ரன் | 4 |
| 52. | தி. சஞ்சீவன் | 4 |
| 53. | இ. கயூரி | 4 |
| 54. | கி. கீன்சிகா | 4 |
| 55. | வி. விதுசனா | 4 |
| 56. | சி. துசிந்தா | 4 |
| 57. | மோ. திவ்யபாரதி | 4 |
| 58. | வ. வரோஜனா | 4 |
| 59. | ம. எலிசா | 4 |
| 60. | ச. வானுஜா | 5 |

## புலமைப் பரிசில் பரிசுபெறும் மாணவர்கள்
## 2012 இல் சித்தியடைந்தோர்

1. சி. திலக்ஷன் - 169
2. பா. சந்துஜன் - 149

## 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

| | | |
|---|---|---|
| 2011 | ம. மதுசா | - 131 |
| | சி. நிஷாந்தன் | - 124 |
| | சி. விஜிதாஞ்சலி | - 117 |
| | கு. நிதுஷன் | - 101 |
| 2012 | சி. சதுஷனா | - 112 |
| 2013 | ந. டெல்சன் | - 140 |
| | த. வானுஜன் | - 120 |
| | தி. குகப்பிரியா | - 105 |

## பரிசில் நிகழ்விற்கு அன்பளிப்பு வழங்கியோர்

| | |
|---|---|
| 1. சுரேஸ் மோட்டோர்ஸ் | 10,000 |
| 2. திருமதி ஜெ. தேவேஸ்வரன் | 1,000 |
| 3. திரு. ச. உமாமகேஸ்வரன் | 1,000 |
| 4. திருமதி க. சத்தியசீலன் | 1,000 |
| 5. திருமதி ப. இராசரத்தினம் | 1,000 |
| 6. திருமதி சு. உதயகுமார் | 1,000 |
| 7. செல்வி வை. ஞானகௌரி | 1,000 |
| 8. திரு. நா. தங்கராசா | 1,500 |
| 9. திரு. செ. திருச்செல்வம் | 1,500 |
| 10. திரு. க. காந்தரூபன் | 1,500 |
| 11. திரு. அ. திருச்செந்திநாதன் | 1,500 |
| 12. திருமதி ஜெ. லலிதா | 1,500 |
| 13. திரு. கி. நீதீஸ்வரன் | 1,500 |
| 14. திரு. சி. ரவிகாந்தன் | 1,500 |
| 15. திரு. பா. கிறிஸ்ரிஅன்ரனி | 1,500 |
| 16. திரு. மா. சிவகுமார் | 1,500 |
| 17. திரு. சி. ராஜ்குமார் | 1,500 |
| 18. திரு. க. ஈஸ்வரன் | 1,500 |
| 19. திரு. யோ. ரவீந்திரன் | 1,500 |
| 20. திரு. அ. சிவசுப்பிரமணியம் | 1,500 |
| 21. திரு. பொ. ருசிவிந்தன் | 1,500 |

| | |
|---|---|
| 22. திரு. இ. ஜெகன் | 1,500 |
| 23. திரு. ந. தினேஸ் | 1,500 |
| 24. திரு. கு. நந்தகுமார் | 1,500 |
| 25. திரு. கி. பேபிக்குமார் | 1,500 |
| 26. திரு. வ. சிவகுமார் | 1,000 |
| 27. திரு. சி. சிவலிங்கராஜா | 1,000 |
| 28. திரு. இ. மோகன்குமார் | 500 |
| 29. திரு. ச. ஜெயசுந்தரம் | 500 |
| 30. திரு. பி. தங்கராசா | 1,500 |
| 31. திரு. எஸ். சண்முகநாதன் | 1,000 |
| 32. திரு. து. மனோகரன் | 500 |
| 33. திரு. செ. இராசேஸ்வரன் | 500 |
| 34. திரு. எஸ். கிருபாகரன் | 1,000 |
| 35. திரு. வ. சடாஸ்கரன் | 500 |
| 36. திரு. எஸ். நடேசபிள்ளை | 500 |
| 37. திரு. எஸ். மகேந்திரம் | 200 |
| மொத்தம் | 51,700 |





கஜானன் பன்முகசேவை - அல்லாரை வீதி, மீசாலை